உ
சிவமயம்

தெல்லிப்பழை கிழக்கு
இலங்கை அரசாங்க நெடுஞ்சாலைகள்
மேற்பார்வையாளராகவிருந்து இளைப்பாறிய
திரு. மூ. சின்னப்பா அவர்களின்
சிரேஷ்ட புதல்வரும்
இலங்கை போக்குவரத்துச் சபையின்
சிரேஷ்ட பரிசோதகருமாகிய

# திரு. பத்மநாதன் அவர்கள்

சிவபதமெய்தியமை குறித்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

ரௌத்திரி௵ புரட்டாதி௴

18-9-1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**தெல்லிப்பழை கிழக்கு**
இலங்கை அரசாங்க நெடுஞ்சாலைகள்
மேற்பார்வையாளராகவிருந்து இளைப்பாறிய
**திரு. மூ. சின்னப்பா அவர்களின்**
சிரேஷ்ட புதல்வரும்
இலங்கை போக்குவரத்துச் சபையின்
சிரேஷ்ட பரிசோதகருமாகிய

# திரு. பத்மநாதன் அவர்கள்

சிவபதமெய்தியமை குறித்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

தொகுத்தவர்:
பிரமஸ்ரீ வ. குகசர்மா அவர்கள்


ரௌத்திரி௵ புரட்டாதி௴

**18-9-1980**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. மூ. சி. பத்மநாதன் அவர்கள்

தோற்றம் :
7 - 4 - 1933

மறைவு :
19 - 8 - 1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

தெல்லிப்பழை கிழக்கு
திரு. மு. சின்னப்பா அவர்களின்
சிரேட்ட புதல்வன்

# திரு. பத்மநாதன் அவர்கள்
# நினைவுமலர்

## வெண்பா

ஆண்டுநல் ரௌத்திரியில் ஆவணி மூன்றுசெவ்வாய்
தீண்டுமுன் அட்டமி சேரனுடம் —பூண்டபுகழ்
பண்புடைச் சீரியோன் பத்மநாதன் ஈசன்ருள்
சென்றடைந்த நாளெனவே செப்பு.

## ஆசிரியப்பா

முத்தும் மணியும் முழங்கிடு சங்கும்
அலைகள் கொணர்ந்து அகன்கரை எற்றும்
நீலமார் ஆழியை நீள்துகி லென்ன
புனைந்திடு ஈழமாம் பொற்புறு மாதின்
நலமுறு வதனமாய் நாவலர் போற்றிடு
யாழ்நகர் ஆங்கவன் மதிநிகர் வதனமார்
கண்ணெனப் படுவது கவினுறு தெல்லி
ஐங்கரன் தன்னுடன் அருள்தரு மம்பிகை
சூலம் ஏந்திடு சுந்தர வைரவர்
எழில்பெறு தளிகள் ஏற்றமா ரிஞ்சிகள்
வைத்திய சாலைகள் வளர்கல் லூரிகள்
புகைரத நிலையம் புகல்கடை வீதிகள்
மருத வளம்சூழ் வனப்புறு தெல்லியில்
மேழிக் கொடியுடை வேளாண் குலத்தில்
சங்கரப் பிள்ளை சாற்றிடு முதலியின்
உத்தம வழிவரு உயரிய செம்மல்
வைத்திய சிகாமணி வனப்புடை முதல்வன்
மூத்த தம்புவாம் மூதறி வாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வுடைப் புதல்வன் உத்தம நலத்தோன்
இலங்கை அரசாங்க இயல்நெடுஞ் சாலைகள்
மேற்பணி யாளராய் வியப்புறு பணிபுரி
இன்சொலும் ஈகையும் ஏற்றமார் தயவும்
பாரினில் உற்ற பண்பார் செல்வன்
சின்னப் பாவெனும் சிறப்புடை முதல்வன்
இரகு நாத இன்புறு முதலியின்
நல்வழி வந்த நாடுறு புகழோன்
கந்த வனமெனும் கண்ணியன் பெற்ற
சிறப்புடைப் புதல்வி சீருடைக் கல்வியும்
பொற்பும் தகவும் பொருந்திய செல்வி
சேரரும் குணமுடைச் செல்லம்மா மாதைத்
திருமணம் புரிந்து திகழ்ந்திடு வாழ்வில்
இல்லற மென்னும் நல்லற மதனால்
தம்பொரு ளென்னத் தந்திடு மக்களுள்
உளமகிழ் மூத்த உத்தம புதல்வனே
பத்ம நாதனும் பண்புறு செல்வன்
ஆங்கிலத் தோடும் அருந்தமிழ் பயின்று
இலங்கைப் போக்கு வரத்துச் சபையின்
தலைமைப் பரிசோ தகரெனும் பதவியில்
பலரும் புகழப் பணிபுரி சீலன்
பகிரங்க வேலைப் பகுதிஓ வசியராய்
இருந்திளைப் பாறிய இன்னகை ஒளிமுகச்
சுந்தர ஏந்தல் சிவசுப் பிரமணிய
அறிவனும் சேயிழை அன்னபூ ரணமும்
பெற்றிடு புதல்வி பேசிடு நிறையுடை
எழில்பெறு மங்கை இந்திரா தேவியை
அந்தணர் பெரியோர் ஆசிகள் கூற
சிந்தையில் மகிழ்வொடு சேர்துணை யாக்கி
இனிதுற வாழ்ந்த இன்மொழிக் குரிசில்
போக்கு வரத்துப் பகுதியி லுயர்ந்த
பதவியி லுற்றிடு பரந்த சீரோன்
திருஞானச் செல்வன் திகழ்மனை யாகி
ரமேஷ் வாசுகி இன்னகைச் சுரேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்மதி யனைய மக்களைப் பயந்திடு
பூவெனப் பொலிதரு புஷ்ப ராணியும்
செல்வ ராணியாம் சேயிழை தலைவனுய்ச்
செல்வ நாத்தொடு சீரிய லக்சியா
மக்களைப் பெற்று மகிழ்வுறு செல்வன்
தெல்விப் பழையில் தெல்லி இன்சினியறிங் இன்டஸ்றீஸ்
யாழ்நகர்ச் சமுத்திரா ரேடிங் கொம்பனி
எழில்நிலை யங்களின் ஏற்றமார் தலைவன்
புகழ்மிகு சிறப்புடைப் புஷ்ப நாதனும்
பீஜித் தீவின் பிரதம மேன்மைப்
பொறியியல் நிபுணராய்ப் பொருந்திய மேன்மையோன்
கெங்கா தரனின் கெழுதகை மனையாய்ப்
பாகெனும் இன்சொற் பரதன் பாமா
மக்களைப் பெற்று மகிழ்வுடன் வாழும்
தேவிகா ராணிச் சேயிழை தானும்
ஸ்ரீஐங் கரன்றன் சிறப்புறு நற்றுய்
பத்ம ராணியாம் பாவை தானும்
இங்கிலாந் ததனில் பொறிஇய லாளர்
உத்தம குணத்தின் உயர்வுறு மனையாள்
பெட்பார் செல்வி பிரேம ராணியும்
உடன்பிறப் பினராய் உற்றிடும் உத்தமன்
தன்மனை யுடன்வரு தக்க சகோதரர்
அமெரிக் காவினில் ஆசிரியத் தொழில்புரி
திருவென விளங்கிடு திலக வதிதன்
அருமைசேர் கணவன் அமெரிக்க நாட்டில்
பகிரங்க வேலைப் பகுதிப் பொறியியலாளர்
விவேகம் மிக்க விவேகா னந்தனும்
விஜய லட்சுமி வியப்புறு கணவன்
இங்கிலாந் ததனில் ஏற்றமார் தொழில்புரி
சண்முக நாதனும் சான்றேன் தானும்
பண்டத் தரிப்பில் பல்லோர் மெச்சும்
இந்துக் கல்லூரி ஏரா சிரியை
நேர்மையிற் சிறந்த நிர்மலா தேவியும்
மன்னுர் பகிரங்க வேலைப் பகுதி

தொழில்நுண் துறையினர் துகளறு குணத்துச்
சர்வா னந்தன் சாற்றிடு செல்வன்
சியாமளா தேவி செல்வ தேவி
இன்னனோர் தங்களை ஏற்றமார் சிறப்பின்
மைத்துனர் மைத்துனி மாரெனப் பெரிதும்
சுற்றமாய்க் கொண்ட சுந்தர குணத்தோன்
நண்பர்க் கினியவன் நலமார் இன்சொலன்
விருந்தினர்ப் போற்றும் விருப்புறு குணமும்
தண்ணளி தயையுடன் தழுவிய உளத்தன்
பத்ம நாதனும் பார்புகழ் செம்மல்
தந்தை சகோதரம் தளர்ந்து புலம்பக்
கற்புடை மனையாள் கலங்கியே ஏங்க
மைத்துனர் சுற்றம் மனமது மறுகிட
சீர்ரெளத் திரியில் சேரா வணிமதி
மூன்றும் நாளில் முன்னுறு செவ்வாய்
பூர்வம் அட்டமி புக்க அனுடம்
மற்றிவை சேர்ந்த நற்றின மதனில்
பிறையணி செஞ்சடைப் பிஞ்ஞகன் அருளினை
மறவா உளங்கொடு மதித்து
பெற்றனன் அவனடிப் பெரும்பே றினிதே.

## கட்டளைக் கலித்துறை

சொல்லார் சிறப்புடைச் சீர்பத்ம நாதனும் சுந்தரனே
எல்லார் வதனம் எழிலறச் சென்றதென் இவ்வுலகில்
நல்லார் எவரும் நவிலுறு தந்தையும் நல்மனையும்
மல்லார் புயமுடை மைத்துனர் நண்பர் மயங்கிடவே.

இன்சொல் பொறுமை எழிலார் வதனம் இயல்பொழிவு
நன்செயல் கல்வி நவில்விருந் தோம்பல் நலமுடைமை
புன்னகைப் பொற்பு புவனம் செறியும் புகழுடனே
மின்னென நீங்கிய தென்பத்ம நாத விளம்புதியே.

## மனைவி புலம்பல்

பொன்னார் வதனப் பொலிவது காணேன் புதுமையுறும்
மின்னார் நகையது காணேன் நடையின் மேன்மைகாணேன்
எந்நாளும் எனையணைக் குங்கரங் காணேன் எழில்தாங்கும்
மன்னவே யான்செய் பிழையொன் றுண்டோ வகுத்துரையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தை புலம்பல்

மேன்மை யுளமகனே வீந்தாய் உளந்தான் மிகமெலிந்து
நான்முன் புலம்பல் நன்றிதோ உனக்கு நவிலுதியே
வான்முன் செலவே! வலிந்து மனம்நீ மதித்ததென்ன
நோன்முள் சிவன்செய் விதியிது வோவென நுவலுதியே.

## சகோதரம் புலம்பல்

சான்றுமை மிக்க சற்குண னேஎமக் கெல்லாம்மூத்த
தோன்றுல் சிறப்புடைத் துணைவா செல்வமே துகளற்ற
ஆன்றோர் மதிக்கும் அருங்குண வானே யெம்மையெலாம்
ஏன்முன் மறந்தாய் இயம்பாய் ஒருசொல் நமக்கினியே.

## வெண்பா

தூயவனே எம்மினிய சோதரனே நாம்புலம்ப
மேயதெவன் ஈங்கு இயம்புதியே—சேயனுய்ச்
சென்றுய் வெகுதூரம் நின்வதன நல்லழகை
என்றினிக் காண்போம் இயம்பு.

## மைத்துனர் புலம்பல்

சுற்றமது சூழ்ந்திருக்கக் கூடிப் பலபேசி
அற்றமற இன்புற் றமர்ந்தனமே—இற்றைநாள்
சற்று மதைக்கருதா சார்ந்தனை மேல்கதியில்
இற்றனமே இன்பமது இன்று.

## மருமக்கள், பெருமக்கள் புலம்பல்

எடுத்து மடிமீ திருத்தியே நன்று
அடுத்த பொருள்பலவும் யாம்மகிழக்—கொடுத்துமே
இன்பமொழி பேசியெமை நன்று மகிழ்வித்தாய்
இன்றெங் கேகினுய் சொல்.

## தேற்றம்

மண்ணில் பிறந்து வளரு முயிரெல்லாம்
எண்ணில் நிலையல்ல இவ்வுடம்பு—மண்மேல்
இறந்தாரை எண்ணி இரங்குவதேன் என்றும்
அறந்தான் புரிமின் அறிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சி முதல்வர்

## மாண்புமிகு அ. அமிர்தலிங்கம் அவர்கள் வழங்கிய

# அனுதாபச்செய்தி

நல்லவர்கள், வல்லவர்கள் என உலகிலே பாராட்டுப் பெற்றவர்களை இறைவன் தன்னிடத்தே அழைப்பதில் அவசரப் படுவது இயல்பு போலாகிவிட்டது. மக்கள் அனைவரும் விரும்பும் மனிதரை ஆண்டவன் அவர்கள் மத்தியில் நீண்டகாலம் விட்டு வைப்பதில்லையோ? நம்மைப் பிரிந்த அமரர் சின்னப்பா பத்ம நாதன் அவர்களின் மறைவுச்செய்தியைக் கேள்வியுற்ற அதிர்ச்சி யில் இவ்வாறுதான் எனக்கு எண்ணத் தோன்றியது.

தெல்லிப்பழையில் 1933ஆம் ஆண்டு பிறந்த திரு. பத்ம நாதன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், அதனைத் தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரியிலும் கல்வி கற்றார். படிக்கும்பொழுதே பல்வேறு பொதுத்துறைகளில் ஈடுபட்டுச் சிறப்புறச் சேவையாற்றினர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையிலே சிரேட்ட பரிசோதகராகப் பணியாற்றியதன் மூலம் அவர் அப்பதவிக்குப் பெருமை தேடித் தந்தார் என்றே கூறலாம். நேர்மையும், திறமையும் நீண்டநேர உழைப்பும் இவரது அணிகலன்களாக விளங்கின. இவர் தமது உயரதிகாரிகளிடம் காட்டிய பண்பும் கீழ்ப்பணியாளர்மீது கொண்ட பண்பும் எல்லோர் மனதிலும் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

''குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்'' என் ருெரு பொன்மொழி யாவரும் அறிந்ததே. குழந்தைகளுடன் இவர் பழகும்போது குதூகலிப்பது மட்டுமல்ல, தாமும் ஒரு குழந்தையாகவே மாறும் இயல்பு இவருக்குரியது. மழலை மொழியில் மனதைப் பறிகொடுத்து மகிழ்ந்த அன்னாரை இளம் வயதிலேயே காலனிடம் பறிகொடுத்தது அவரது குடும் பத்தினருக்கு மட்டுமல்ல நம் அனைவருக்குமே பொதுவான பேரிழப்பாகும்.

அமரர் பத்மநாதனின் மறைவினுல் ஆருத்துயரில் மூழ்கி யிருக்கும் அன்னாரது அருமைத் துணைவிக்கும், அன்புத் தந்தை யார், உடன்பிறந்தோர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதா பங்கள் உரியதாக.

அமரரின் ஆத்ம சாந்திக்கு எந்தன் நெஞ்சம் கனிந்த அஞ்சலிகள்.

அ. அமிர்தலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபிராந்திய போக்குவரத்துச் சபை
வவுனியா பிரதேச முகாமையாளர்

## திரு. நா. தியாகராசா அவர்கள்

வழங்கிய

# அனுதாபச்செய்தி

எனது இனிய நண்பன் திரு. பத்மநாதன் அவர்களை இவ்வளவு கெதியில் காலன் கவர்ந்து செல்வான் என்று நான் மறந்தும் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. ஒரே ஆண்டில் பிறந்து ஒரே கல்லூரியில் கல்வி பயின்று ஒன்முகவே கடமை புரிந்து அவரோடு பழகி வாழ்ந்த இனிய நாட்களை மறக்கவே முடியாது.

பகைமை இல்லாமல் ஓர் மனிதன் இவ்வுலகில் பிறந்து வாழ்ந்தாரென்றால் அது பத்தர் என்று அன்போடு அழைத்த திரு. எம். எஸ். பத்மநாதனைத் தவிர வேறு எவருமில்லை என்று தான் கூறவேண்டும்.

கிட்டத்தட்ட 30 வருடங்களுக்கு மேல் அவரோடு ஒன்முகப் பழகியவன் நான். அவரது மரணச் செய்தி கேட்டதும் என்னால் நம்பவே முடியவில்லை.

காந்தி, யேசுவுக்குக்கூட எதிரிகள் இருந்தார்கள். ஆனால் என் இனிய நண்பனுக்கு அவன் அகராதியிலே எதிரியில்லை. கோபம் இல்லாத ஒரு மனிதப் பண்பு உலகில் இருந்ததென்றால் அது காலஞ்சென்ற இனிய நண்பன் பத்மநாதன்தான்.

குழந்தை உள்ளம் படைத்த இவருக்கு ஆண்டவன் ஏனோ குழந்தைப் பாக்கியத்தைக் கொடுக்கவில்லை. கணக்கு முடியுமுன் காலன் கவர்ந்து செல்வானென்றபடியால்தான் அவன் குழந்தையாகவே இருந்துவிட்டு மறைந்துவிட்டான்.

சகோதரன்போல் பழகிய நண்பனின் இழப்பால் வருந்தும் திருமதி பத்மநாதனுக்கும் அவர் குடும்பத்தாருக்கும் எனதும் எனது குடும்பத்தாரினதும் ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடையவேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நா. தியாகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபிராந்திய கோண்டாவிற்சாலை

உடன் பணிபுரி ஊழியர்கள் வழங்கிய

# அனுதாபச் செய்தி

## அமரர் ஆன்மா சாந்தி பெறுக

அணையக்கூடாத பேரொளி அணைந்துவிட்டது. அன்பு இதயத்தால் அனைவரையும் அணைத்தெடுத்த அந்த அறிவுமகன் பத்மநாதன் இனி நம்மிடை இல்லை. இதை நம்பமுடியவில்லை; நேற்றுவரை பண்போடும் பாசத்தோடும் பழகிய ஒருவர் இன்று இல்லை என்கிறபோது கண்கள் குளமாகின்றன, சிந்தனை திகைக்கிறது, நெஞ்சம் வெதும்புகிறது. என்ருலும் மறைந்துவிட்டார், அமரராஞர் என நம்ப மறுக்கிறது மனம்.

இது பிரியக்கூடாது என்ற பாசஉணர்வாலேற்பட்டதோ என்னவோ தெரியவில்லை.

சிரித்த மொழி பேசி, சிறிதளவும் கோபஉணர்வே காட்டாது சில்வண்டுபோல ஓடியாடித்திரிந்த வஞ்சகமறியாத, சூழ்ச்சி, சூதுவாது அறியாத தூயவனை இழந்து தவிக்கிறோம். பழகிய நாமெல்லாம், கொழும்புக்கு மருத்துவம் செய்விக்கப்போன போது எது நடக்கக்கூடாது என்று எண்ணினோமோ அது நடந்து விட்டது.

உற்ருர், உறவினர் சுற்றி நின்றழப் பிரிந்தாரைப்போல இல்லாமல் யாழ்ப்பாண தீபகற்பம் முழுமையுள்ள உடன் பணி புரிந்தோர், பழகினோர் அத்தனைபேரும் கலங்கிய கண்களோடு கதறியழுத வாயோடு நிற்கப் பிரிந்தார் அவர்.

எங்கும் என்றும் எவரும் அன்போடு உரிமையோடு எம். எஸ். பத்மநாதன் என்று குறிப்பிட்டுப் பேசும் அந்தப் பண்பாளன் இனி இல்லை.

பிள்ளைப்பேறின்மையால் அனைவரையுந் தன்பிள்ளைகள் போற் பேணிய அந்த நல்ல உள்ளம் இனிக் காணமுடியாத தொலைதூரம் போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்திரண்டு ஆண்டுகட்கு மேலாக எம்மிடையே சேவை செய்தார். பல இடங்களிலும் பெற்ற அனுபவம் எமக்கு வழி காட்டியாக இருக்க உதவிற்றே. பிரதான, வீதிப் பரிசோதக ராக இருந்து திறம்படக் கடமைசெய்த அந்தச் செம்மல் திரும் பாத பாதை சென்றுவிட்டார்.

தனக்கென வாழாத தனிநலம் வாய்ந்த அண்ணல் எங்கும் போவார், எவரையும் காண்பார், எதையும் சாதிப்பார். அப் படியான ஒரு சாமர்த்தியம் கைவரப் பெற்றவர்.

குணமாக என்று கொழும்புபோன நண்பர் பிணமாக வந்தா ரென்றால் கும்பி எரியாதோ! பழகிய நமக்கு இப்படியென் றால் குடும்பத்தினரும், சகோதரிகளும், தனியன்புத் தம்பியும் படுந்துயரம் பேசிமுடிவதோ?

விதியே உனக்கு அழிவில்லையோ? கொல்லுங் கொடு யமனே, உன்னைக் கொல்ல இன்னொருவரில்லையோ? எரித் தழித்த செந்தீயே உன்னை உருத்தெரியாதழிக்க இன்னொரு தீ பிறக்காதோ? என்று வாய்திறந்து ஓலமிடும் மக்கள் கூட்டத் தோடு சேர்ந்து நாமும் கதறுகிறோம். என்றும் மாறாத இடத்தை எமது இதயங்களிலே பிடித்துவிட்ட அமரர் எம். எஸ். பத்ம நாதன் (தெல்லிப்பழை) அவர்கள் ஆன்மா சாந்திபெறுக என வேண்டுகிறோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

வடபிராந்திய, கோண்டாவிற்சாலை
உடன் பணிபுரி ஊழியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபிராந்திய போக்குவரத்துச் சபை
யாழ்சாலை (கோண்டாவில்) த/லிகிதர்

## திரு. K. C. சண்முகலிங்கம்

வழங்கிய

# இரங்கற்பா

அன்பின் னுருவே அறிவின் களஞ்சியமே
இன்பின் உறவுக் கிலக்கணமே — பண்பின்
உறைறவே என்னைவிட்டு உறவறுத்துச் சென்று
இறைவனடி சேர்ந்தனையே ஏன் !

நண்பரிடம் ''பத்தராய்'' என்னிடையே அண்ணுய்
அன்புடைய யாரிடத்தும் "ஐயா"வாய்—தென்புடைய
நாவலனுய் வீற்றிருந்த நல்லவனே காலனவன்
காவலன்பின் சென்றதேன் சொல்.

என்செய்வேன் அந்தோ எனக்குத் துணையேது?
நின்செய்த் திறனுக்கு நேரேது—என்நெஞ்சம்
கொண்ட தமிழா குணக்குன்றே நின்னையெமன்
கொண்டெங்கு சென்றனனே கூறு.

என்னை மறந்து இவ்வுலகந் தான்மறந்து
உன்னை மறந்து உறங்குகிறுய்—அம்மம்மா
ஆற்றுத் துயரிலென்னை ஆழ்த்திவிட்டுச் செல்கிறுய்
தேற்றுவார் யாரெம்மைச் செப்பு.

இலக்குப் பிழைத்து இனத்தை விடுத்து
வலக்கை இழந்துயான் வாடுகின்றேன்—தலத்தின்
நிலைகாட்டிச் செல்கிறுய் நின்னுர் உருவை
நிலைநாட்டி வைத்திருக்கும் நெஞ்சு.

K. C. சண்முகலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்காதுரந்தரி

# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

வழங்கிய

# அனுதாபச்செய்தி

## புன்முறுவல் தவழும் புனித சீலன்

''பத்தர்'' என்று பல்லோராலும் பண்பாக அழைக்கப் படுபவர் திரு. சி. பத்மநாதன் அவர்கள். தன் வாழ்நாளில் எல்லோருடனும் இதமாகப் பழகும் பேற்றினையே விரும்பி நின்ற பெருமை இவருக்கு உண்டு. கடமையுடன் குடும்பப் பெருமையும் இவரைச் சார்ந்திருந்தது. ஈழத்திலே இ.போ.ச. ஸ்தாபனத்தின் இணையற்ற உத்தியோகத்தவராக விளங்கினர். இதனல் எல்லோருடைய அன்புக்கும் பாத்திரரானர். தனக் கேற்ற அருமை மனைவியாரையும் பெறும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. எனினும் விதி என்ற ஒன்று சதி செய்துவிட்டது. வாழ்வை இடைநிறுத்தி அழைத்துவிட்டான் இயமன், அருமைப் பாரியாரின் கண்ணீரை யாரால்தான் துடைக்கமுடியும்? தெய்வம்தான் அவவுக்கு ஆறுதல் சொல்லவேண்டும்.

அமரர் பத்மநாதன் அவர்களை எல்லோருமே நேசித் தார்கள். இன்றுமே நேசித்து நினைக்கிருர்கள். நினைந்து கொண்டே இருப்பார்கள். அவர் ஆத்மா சாந்தியடைய நாமும் பிரார்த்திப்போமாக.

தங்கம்மா அப்பாக்குட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருமுறைப்பாடல்கள்

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே.

— சம்பந்தர்

பொக்கம் பேசிப் பொழுது கழியாதே
துக்கம் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ
தக்கன் வேள்வி தகர்த்த தழல்வண்ணன்
நக்கன் சேர்நல்லம் நண்ணுதல் நன்மையே.

— நாவுக்கரசர்

நத்தார்படை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

— சுந்தரர்

அருளுடைச் சுடரே அளித்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவற் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

— மணிவாசகர்

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளக்குந்
தூயநற் சோதியுட் சோதீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றுயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

— திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழம்அடி யாரொடுங் கூடிஎம்
மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனர் திருப்பல்லாண்டு

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

— சேக்கிழார்

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரும் இளமையும் வளமேவும்
விரிந்த காடும் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்கு தீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தி லேறும் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங் குலாவும் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே.

— அருணகிரிநாதர்

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லால்பொன்னி னம்பலவ
ரடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே.

— பட்டினத்தார்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நன்றி

எமது அன்புத் துணைவரின் ஈமச்சடங்கு, அந்தியேஷ்டி ஆகியவற்றிற் பங்குபற்றி ஆறுதலளித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகளனுப்பியவர்களுக்கும், சிறப்பாக இ. போ. ச. ஊழியர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வணக்கம்

தெல்லிப்பழை,
18-9-1980.

திருமதி இ. பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்—3338/9-80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org